



## திருக்குறள்

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டாற்பாற் றன்று

அதிகாரம் - 9 - விருந்தோம்பல்


திருவள்ளுவர்

RHODE ISLAND TAMIL SCHOOL

ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# பிப்ரவரி செய்திமடல்

( தை - மாசி )



விருந்தினராக வந்தவரை வெளியே விட்டுவிட்டுச் சாகாத மருந்தாக இருந்தாலும் அதனைத் தான் மட்டும் உண்பது விரும்பத் தக்க பண்பாடல்ல

With a guest outside, it is wrong to eat alone, Even the nectar of immortality.

## பள்ளியின் அறிவிப்புகள் !!

1. ஜனவரி 24ஆம் தேதி நம் பள்ளியில் நடைபெற்ற பொங்கல் கலை மற்றும் கைவண்ண திட்டங்களும், பொங்கலை பற்றி பேச்சுகளும் மற்றும் இதர நிகழ்ச்சிகளும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்கள் அவரவர் திறமைகளை மிகச் சிறப்பான முறையில் வெளிப்படுத்தினர். இதற்கு பெரிதும் உதவிய பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பள்ளியின் சார்பாக பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.
2. பிப்ரவரி 28 ஆம் தேதி இரண்டாம் பருவத் தேர்வு நடைபெற உள்ளது.

## பள்ளி அட்டவணை பிப்ரவரி மாதம்

February 25

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | |
| | | | | | | |

RITamilSchool Calendar

## கல் அல்ல வைரக்கல் !

அவன் ஒரு வியாபாரி எதிர்காலத்தில் பெரிய தொழிலதிபராக வரவேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால், சரியாகத் திட்டமிட்டு செயல்படாததால், அவன் பெரிய நஷ்டத்தைச் சந்திக்க நேர்ந்தது. மிகுந்த கவலையில் ஆழ்ந்த அவன் வீட்டுக்குச் செல்ல மனமில்லாமல், ஊரை விட்டு ஒதுக்குப் புறமாக இருந்த ஆற்றங்கரைக்குப் போனான்.



அங்கே மெல்லிய நிலா வெளிச்சத்தில் ஆற்று மணலில் அமர்ந்து நினைவுகளை ஓடவிட்டான். வியாபாரத்தில் தோற்றுப்போன அவலம் அவனை அழுத்தியது. பங்குதாரர்கள் எப்படியெல்லாம் தனக்குத் துரோகம் செய்தார்கள். நம்பவைத்துக் கழுத்தறுத்தார்கள் என்று எண்ணியெண்ணி வேதனையில் மூழ்கினான். தொடர்ந்து எப்படி வியாபாரம் செய்யப்போகிறோம்.. குடும்பத்தை எப்படி நடத்தப் போகிறோம் போன்ற எதிர்காலக் கவலைகள் வேறு ஒருபுறம் எழுந்து அடங்கின. இந்தச் சிந்தனையிலூடே அவன் வலக்கை அவனை அறியாமல் ஆற்று மணலைத் துழாவி கைக்குத் தட்டுப்பட்ட சிறு சிறு கற்களை எடுத்து ஆற்றில் வீசியவண்ணம் இருந்தது. இப்படியாக அவன் அன்றிரவு முழுதும் அங்கேயே அமர்த்திருந்தான்.



பொழுது விடிய ஆரம்பித்தது! வெளிச்சம் பரவியது. ஆற்றிலே வீசுவதற்கு அவனைச் சுற்றி இருந்த கற்கள் எல்லாம் தீர்ந்து போய்விட்டன. அவன் தன் கையில் இருந்த கடைசிக் கல்லைப் பார்த்தான், பிரமித்துவிட்டான். காரணம் அது சாதாரண கூழாங்கல் இல்லை. விலை உயர்த்த வைரக்கள். யாரோ கொள்ளையர்கள் தாங்கள் கொள்ளையடித்து வந்த வைரக்கற்களை ஆற்றங்கரையிலேயே தவறவிட்டு விட்டு ஓடியிருக்கிறார்கள். அவற்றைத் நான் அவன் இருட்டில் இன்னதென்று அறியாமல் எடுத்து வீசியிருக்கிறான்.



ஒரு வகையில் பார்த்தால் நம்மில் பலர் அந்த வியாபாரி மாதிரி தான். கடந்த காலம் மற்றும் எதிர்கால நினைவுகளில் மிதந்து கொண்டு நிகழ்காலம் என்கிற வைரக்கற்களை வீணடித்துக் கொண்டிருக்கிறோம்.




சாமர்த்தியம் இருந்தால் எதையும் சமாளிக்கலாம். தைரியம் இருந்தால் எப்படியும் சாதிக்கலாம்.

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# பிப்ரவரி செய்திமடல்

( தை - மாசி )



If you have skills, you can tackle anything. If you have courage, you can achieve anything.

## முத்தமிழ் முத்துக்கள்

### கும்மி







தமிழகத்தின் தொன்மையானக் கலை “கும்மி”. கைகளின் ஓசையை மட்டுமே இசையாகக் கொண்டு உருவான ஒருவகை நடனக்கலையே கும்மியாகும். இது இசைக் கருவிகள் தோன்றும் காலத்திற்கு முன்னரே உருவான கலையாக அறியப்படுகிறது. ஆதிமனிதன் உழவையும் தொழிலையும் தொடங்கிய காலத்தில் கும்மி ஆட்டம் தோன்றியிருக்கக்கூடும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். தன் உழைப்பின் களைப்பு தீரவும் தொழில் மற்றும் பிற கருத்துகளை எடுத்துக் கூறவும் கும்மி தோன்றியிருக்கலாம் என்பதற்குச் சான்றாக இன்றளவிலும் உழைக்கும் மக்களின் கலையாக கும்மி இருந்து வருகிறது.

கும்மி என்ற கலை, “கொம்பை ” என்ற பெயரில் அகநானூறு, குறுந்தொகை முதலிய சங்க இலக்கிய நூல்களில் இடம்பெற்றுள்ளது.

பொதுவாக கும்மியடித்தல் என்பது பெண்கள் மட்டும் பங்கேற்கும் நடனக்கலை போன்றே தோன்றினாலும், தமிழகத்தின் சில பகுதிகளில் ஆண்களும் இதில் பங்கு பெறுவதுண்டு. குழுவில் ஒரு பெண் அடியெடுத்துப் பாட, மற்றவர்கள் பின்பாட்டு பாடுவார்கள். அந்தப் பாடலின் மெட்டுக்கேற்ப, கைகளைத் தட்டி, தாளம் எழுப்பி, வட்டமிட்டு ஆடி வரும் வகையில் இன்று கும்மி பரவலாக அறியப்படுகிறது.

பல ஆண்டுகளாகக் கும்மி வாய்வழியாகவே வழங்கி வந்திருக்கிறது. பின்னர், நாளடைவில் வாய்மொழியாக இருந்து வந்த கும்மி பாடல்கள் இலக்கிய வடிவம் பெறத் துவங்கின. மேலும், கும்மி பாடல்களுக்கென்று தனியாக வெண்பா முறையில் இலக்கணம் வகுக்கப்பட்டது. இயற்கும்மி, ஒயிற்கும்மி, ஓரடிக் கும்மி என்று மூன்று வகையான பாவடிவம் கும்மியில் உண்டு மற்றும் கும்மியில் நிறைய வகைகள் உண்டு.

ஆனால் இன்று கும்மியின் பலவகைகள் மறைந்து விட்டாலும், எஞ்சியிருக்கும் சில கும்மிப் பாடல்களையாவது முறையாகப் பதிவு செய்து, பயின்று, கும்மியைப் போற்றுவோம், பாதுகாப்போம்.

## நினைவு நாளேடு

### கிரவுண்ட்ஹாக் தின விடுமுறை (Groundhog Day holiday ):

கிரவுண்ட்ஹாக் தினம் என்பது அமெரிக்கா மற்றும் கனடாவில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 2 ஆம் தேதி கொண்டாடப்படும் ஒரு விடுமுறை. இந்த நாளில் ஒரு கிரவுண்ட்ஹாக்கின் நடத்தை அடுத்த ஆறு வாரங்களுக்கு வானிலையை கணிக்க முடியும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது இந்த பாரம்பரியம்.

இந்த பாரம்பரியம் பேட்ஜர்கள் (badgers) அல்லது கரடிகளை (bears) உள்ளடக்கிய ஒரு ஜெர்மன் வழக்கத்தில் தோன்றியது, ஆனால் பென்சில்வேனியா ஜேர்மனியர்கள் இறுதியில் கிரவுண்ட்ஹாக்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். மிகவும் பிரபலமான கிரவுண்ட்ஹாக் தின கொண்டாட்டம் பென்சில்வேனியாவின் புன்க்சுடாவ்னியில் (Punxsutawney Phil) நடைபெறுகிறது.

இந்த நாளில் ஒரு கிரவுண்ட்ஹாக் (நிலப்பன்றி) நீண்ட குளிர்கால உறக்கத்திற்குப் பிறகு தனது நிழலைத் தேடுவதற்காக தனது குழியிலிருந்து வெளியே வரும் நாள் இது. அன்று அதன் குழியிலிருந்து வெளிப்பட்டு அதன் நிழலைக் கண்டால், அது அதன் குகைக்குள் பின்வாங்கும், குளிர்காலம் இன்னும் ஆறு வாரங்களுக்கு நீடிக்கும் என்று அர்த்தம்; அது அதன் நிழலைக் காணவில்லை என்றால், வசந்த காலம் சீக்கிரமாக வரும் என்ற பென்சில்வேனியா டச்சு மூடநம்பிக்கையிலிருந்து இது பெறப்பட்டது. 2025 ஆம் ஆண்டில், நிழல் காணப்பட்டது, குளிர்காலத்தின் மேலும் ஆறு வாரங்களுக்கு இது வழிவகுத்தது.


இந்த நிகழ்வில் இசை, உணவு மற்றும் பன்க்ஸ்சுடவ்னி ஃபில் (Punxsutawney Phil) வழங்கும் வசந்த காலத்தின் முன்னறிவிப்பு அல்லது அதிக குளிர்காலம் ஆகியவை அடங்கும்.

## பிப்ரவரி மாதம் மலர்ந்த மொட்டுக்கள் :

- அக்ஷரா சாய் விக்னேஷ்
- கன வாணி வினோத்குமார்
- கன வீணா வினோத்குமார்
- குஹவரன் லிங்கேஷ்
- சாய் மயூரேஷ் சிவசுப்பிரமணியன் தீபிகா வேலம்
- தருண் சிவராஜ்
- மகிழ்மித்ரன் இளங்கோ
- முகில் பிரபு
- வித்யூத் முருகராஜ்
- விரிஷா செந்தில்

பிப்ரவரி மாதத்தில் பிறந்தநாள் கொண்டாடும்
நம் பள்ளி செல்வங்களுக்கு,
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

## மாணவர்களின் கைவண்ணம் !



## கண்டுபிடியுங்கள் !

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ | ச | ம | கோ | ஆ | ண | ஊ | எ | ப | நீ | எ |
| ம் | ஐ | ஈ | வீ | அ | ம | ங | கா | க | ழ | ஏ |
| ம் | ச | ன | ழ் | ண் | டு | ஞு | த | டு | நீ | ஏ |
| ய | அ | ம | நீ | ண | பு | ர் | ம | ன | ர் | ர் |
| ப | டு | ன் | ல | ன் | ஓ | வீ | பா | லை | வீ | அ |
| பா | அ | ள் | ன | ர் | ள் | வீ | லை | ஈ | ழ் | ஓ |
| க | ஏ | ஓ | ழ | ம் | க | பா | வ | ன | ச் | ற |
| டு | லை | ல | ச | ள் | எ | ள் | ன | ண | சி | ம |
| ச | கோ | த | ரி | வீ | த | ப் | ம் | வீ | க | ந |
| ரி | ச | ன | கோ | அ | டு | ப் | பு | உ | ள் | ஆ |
| ர் | த | ழ | ஐ | அ | அ | வீ | ஈ | ங | ழ | ண |

அடுப்பு அன்னம்
அண்ணன் சகோதரி
மலர்கள் மலை
நீர்வீழ்ச்சிகள் வீடு
பாலைவனம் காடு

உங்கள் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன:
கதைகள், கட்டுரைகள், வரைபடங்கள், விடுகதைகள், சிறு குறிப்புகள், குறுஞ்செய்திகள் போன்ற உங்கள் படைப்புகளை 15-ஆம் தேதிக்குள் NEWSLETTER.RITAMILSCHOOL@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இணையதளம்: HTTPS://WWW.RITAMILSCHOOL.ORG/
முகநூல்: HTTPS://WWW.FACEBOOK.COM/RITAMILSCHOOL